ISSN: 2582-9513

# திருஞானசம்பந்தரின் விருந்தாய இசைத்தமிழ்சொல் மாலைகள்

**முனைவர் செ.கற்பகம்**
**துறைத்தலைவர், இசைத்துறை**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கண இலக்கிய நுட்பம் நிறைந்த தமிழை இயற்றமிழ் என்றும், கேள்விப்புலனால் மொழியின் சிறப்பை மேம்படுத்தும் தமிழை இசைத்தமிழ் என்றும், இயலையும், இசையையும் காட்சி கேள்விகளால் அனுபவமாக்குவது நாடகத்தமிழ் என்றும் வழங்குவர். இத்தகைய தமிழ் மொழியை இசைப்பண்புடையதாக்கித் தந்த பெருமை பக்தி இலக்கியமான தெய்வத்தமிழைச் சாரும். தெய்வத்தமிழால் இறைவனோடு மனிதர்களை இயைய வைத்த தேவாரப் பாடல்களின் முன்னோடியாகவும், வயதில் மிகவும் இளையவராகவும், சாதிக்க இயலாத பல அரிய இசை நுட்பங்களைத் தந்தவராகத் திருஞானசம்பந்தர் விளங்குகிறார்.

சைவத்திருமுறைகள் பனிரெண்டில் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்பு முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இதில் 385 பதிகங்களும், 4189 பாடல்களும் உள்ளன. சம்பந்தர் இயற்றியருளிய பதிகங்கள் பெரும்பாலும் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன. இத்திருப்பதிகங்கள் சம்பந்தரால் முதன்முதலில் அருளிச் செய்யப் பெற்றவையாகும். தமிழில் பிற்காலத்தெழுந்த பனுவல்களுக்கெல்லாம் மூல இலக்கியங்களாக இவை திகழ்கின்றன. இதனால் பன்னிரு திருமுறைகள் நூலின் ஆசிரியர் க. வெள்ளைவாரணனார் இத்திருப்பதிகங்களை“விருந்தாய இசைத்தமிழ் சொல் மாலைகள்” என்று குறிப்பிடுகிறார்.

சம்பந்தரின் விருந்தாய இசைத்தமிழ் சொல் மாலைகளை நான்கு வகையில் பாகுபடுத்தலாம்.யாப்பு அடிப்படை, பொருள் அடிப்படை, அமைப்பு அடிப்படை,இசை அடிப்படை.. செய்யுள் யாப்பு அடிப்படையில் திருஞானசம்பந்தரின் இசைத்தமிழ்ப்பாக்களை திருஇருக்குக்குறள், ஈரடி, ஈரடி மேல் வைப்பு, நாலடி மேல் வைப்பு, திருமுக்கால், திருஎழுக்கூற்றிருக்கை பதிகங்களை வகைப்படுத்தலாம். பொருள் அடிப்படையில் நமச்சிவாய பதிகம், கோளறு பதிகம், திருப்பதிகக் கோவை, சேஷத்திரக்கோவை, திருநீற்றுப் பதிகம், திரு இயமகம், திருப்பாசுரம் ஆகியவை அமைந்துள்ளன. அமைப்பு அடிப்படையில் வினாவுரைப்பதிகம், மாலைமாற்று, சக்கரமாற்று, மொழிமாற்று,

ISSN: 2582-9513

கோமுத்திரி இவற்றுடன் தேர்பிரபந்தமான திருஎழுக்கூற்றிருக்கையையும் அமைகின்றன. இசை அடிப்படையில் சம்பந்தரின் திருத்தாளச்சதி, யாழ்முரி, திருவிராகப் பதிகங்கள் அமைந்துள்ளன. இவ்வகையில் திருஞானசம்பந்தர் அருளிய விருந்தாய இசைத்தமிழ் சொல் மாலைகள் பண்ணமைதியொடும், தாள அமையொடும், கட்டளைப்பாங்கொடும் அமைந்து இசைவளம் மேம்பட்ட பாடல்களாகத் திகழ்ந்து வருகின்றன.

**திறவுச் சொற்கள்**
திருஞானசம்பந்தர், செய்யுள், யாப்பு, சைவத்திருமுறைகள், திருப்பாசுரம், யாழ்முரி.

**முன்னுரை**

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தர் (கி.பி.638-654) கி.பி.638இல் சித்திரை மாதம் சித்திரை விண்மீன் நாளன்று அந்தணர் மரபில் கௌணியர் குலத்தில் சீகாழியில் வாழ்ந்த சிவபாத இருதயர், பகவதி அம்மையாரின் மகனாகத் தோன்றினார்.

மூன்றாவது வயதில் தந்தையார் பொய்கைக்கு நீராடச் சென்றபோது, தானும் சென்று, தந்தை நீரில் மூழ்கி மந்திர வழிபாடு செய்த பொழுது தந்தையைக் காணாது தோணியப்பரைப் பார்த்து “அம்மையே அப்பா” என்று அழுது கொண்டே அழைத்தார். இப்பிள்ளையின் அழுகுரல் கேட்ட அம்மையப்பர் உமையம்மையின் ஞானப்பாலை அருளினார். இவ் ஞானப்பாலை உண்டமையால், “கவுணியர் கோன் பாலறாவாயர்” என்றும், திருஞானசம்பந்தர் என்றும் அழைக்கப்பட்டார். 16 வயது வரை இம்மண்ணுலகில் வாழ்ந்து தலங்கள் தோறும் பயணித்து பண்ணிசையால் பரமனைப் பாடிப்பாடி துதித்து கி.பி.654இல் வைகாசி மூல நாளன்று பெருமணநல்லூர் என்ற ஆச்சாள்புரத்தில் நடந்த இவரின் திருமண விழாவில் மனைவி சொக்கியாருடன் அடியாருடன் இறைச்சோதியில் கலந்தார்.

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் 16,000. இவற்றுள் இன்றுவரை கிடைத்துள்ளவை 385 பதிகங்கள் 4180 பாடல்கள் . இவை 22 பண்களில் அவற்றிற்குரிய கட்டளைகளோடு கிடைத்துள்ளன. காரைக்கால் அம்மையார் பாடிய பதிகப் பெருவழியைப் பின்பற்றி இவர் பாடியவற்றுள் கிடைத்துள்ள பதிகங்கள் 383 புதியவை 2 ஆக 385 இவை பண்முறையில் அமைக்கப்பட்டு மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுத்தபொழுது பண்ணமைதியிலும், அப்பண்ணுக்குரிய கட்டளை அமைதிகளிலும் அமைத்துள்ளார். இவ்வகையில் இவர் பாடிய முதல் பதிகமான “தோடுடைய செவியன்” தொடங்கி இறைஜோதியில் கலந்தது வரை பாடிய

"கல்லூர் பெருமணம் வேண்டா கழுமலம் " என்ற பதிகங்கள் வரை அமைக்கப்பட்டுள்ளன.

ஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய விருந்தாய இசைத்தமிழ் சொல் மாலைகள் முதன்முதலில் அருளிச் செய்யப்பட்டவையாகும். இத்தகைய பதிகங்கள் மூல இலக்கியங்களாகப் பிற்கால இலக்கிய வகை வளர்ச்சிக்குத் துணைநிற்கின்றன.

இவற்றை இறைக்கவி என்றும், சித்திரகவி என்றும் அழைப்பர்.

மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழி, மடக்கு, யமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி வைப்பு, ஈரடி மேல் வைப்பு, திருவிராகம், சக்கரமாற்று, கோமுத்திரி, யாழ்மூரி, திருத்தாளச்சதி போன்றன உள்ளன. இவற்றை யாப்பு, பொருள் ,அமைப்பு மற்றும் இசை அடிப்படையில் வகைப்படுத்திக் காணலாம்.

**யாப்பு அடிப்படை**

செய்யுள் யாப்பு அடிப்படையில் திருஞானசம்பந்தர் அருளிய விருந்தாய இசைத்தமிழ் மாலைகளாக திருஇருக்குக்குறள், ஈரடி, ஈரடி மேல் வைப்பு, நாலடி மேல் வைப்பு, திருமுக்கால், திருஎழுகூற்றிருக்கைப் பதிகங்களைக் காணலாம்.

**திருஇருக்குக்குறள்**

திருக்குறளைப் போல இரண்டு அடிகளால் அமைந்த பதிகங்கள். ஆனால் திருக்குறள் போல் அமையாமல் சற்று வேறுபட்டுள்ளது. திருக்குறள் ஏழு சீர்களால் அமையும். திருஇருக்குக்குறள் இரண்டடிகளில் நான்கு நான்கு சீராக எட்டுச்சீர்கள் பெறும். இது இருக்குவேதம் போலச் சாய் தத்துவத்தைக் கூறுவதால் இருக்குக்குறள் என்று பெயர் பெற்றுள்ளது என்று க.வெள்ளைவாரணார் இசைத்தமிழ் நூலில் ப.79 இல் குறிப்பிட்டுள்ளார். "தமிழ் இருக்குக் குறள்" என்று சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் பா.2174 இல் குறிப்பிடுகிறார். இவ்வகையில் முதல் திருமுறையில் ஏழும், மூன்றாம் திருமுறையில் இரண்டுமாக மொத்தம் ஒன்பது பதிகங்கள் திருஇருக்குக்குறள் பதிகங்களாக உள்ளன. தெய்வத்தமிழ் பதிகங்கள் என்ற நிலையில் திரு என்ற அடைமொழியொடு அமைந்துள்ளது.

திருப்பிரமபுரம், திருவாரூர், திருவீழிமிழலை, திருக்கழுகுன்றம், திருஇடைமருதூர், திருஆலவாய், திருஅன்னியூர், திருக்கச்சி ஏகம்பம் தலங்களின் மீது குறிஞ்சி, கொல்லிப் பண்ணில் அமைந்த பதிகங்களாக உள்ளன.

**வாசி தீரவே காசு நல்குவீர்**
**மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே**

ISSN: 2582-9513

**காழி மாநகர் வாழி சம்பந்தன்**
**வீழிம் மிழலைமேல் தாளும் மொழிகளே (சம்பந்தர் 1:92:1)**

வீழிமிழலை இறைவனிடம் காழி மாநகர் வாழி சம்பந்தன் வட்ட மில்லா பொற்காசு வேண்டி பாடி நாள்தோறும் பொற்காசு பெற்று அடியார் பெருமக்களுக்கு அன்றாடம் அமுதளித்த வரலாற்றோடு தொடர்புடையது இப்பதிகமாகும்.

**ஈரடி**

திருஇருக்குக்குறள் போல அமைந்த மற்றொரு வகை யாப்பு ஈரடி கொண்ட யாப்பாகும். இவ்வகையில் மூன்று பதிகங்கள் மூன்றாம் திருமுறையில் பழம் பஞ்சுரம் பண்ணில் அமைந்துள்ளன. இவை திருப்பிரமபுரம், திருவீழிமிழலை, பல்லவனீச்சரம் என்ற தலத்தின் மீது அமைந்துள்ளன.

**வரமதேகொள வரமதேசெயும் புரமெரித்தவன் பிரமரற்பரத்**
**தரணணாமமே பரவுவார்கள் சீர் விரவுநீள் புவியே (சம்பந்தர் 3:110:1)**

**ஈரடி மேல் வைப்பு**

செய்யுளில் முதலிரு அடிகள் ஒரு அமைப்பாகவும், அடுத்த இரு அடிகள் மற்றொரு அமைப்பாகவும் அமையும். முதலிரண்டு அடிகள் ஈரடி என்றும், பின்னிரு அடிகள் ஈரடிகளின் மேல் சந்த பொருளும் மாறாமல் பாலின் பெயர் பெற்றுள்ளது.

இவ்வகையில் திருஞானசம்பந்தர் திருக்கொளம்புதூரில் ஓடம் விட்டபொழுது பாடிய பதிகம், ஈரடி மேல் வைப்பில் அமைந்துள்ளது. இப்பதிகத்தின் முதல் பாடல்களில் மேல் வைப்பு ஒரே மாதிரியாக அமைந்து திருக்கடைக் காப்பில் மாறியுள்ளது.

**பண் காந்தார பஞ்சமம்**

**ஈரடி பாடல்கள் கொட்ட மேகமழும் கொள்ளம் பூதூர்**
**நட்ட மாடிய ரம்பனை யுள்கச்**
**மேல் வைப்பு செல்ல உந்துக சிந்தையார் தொழ**
**நல்கு மாறருள் நம்பனே (சம்பந்தர்.3:6:1)**

பாடலின் முதலிரு அடிகள் பாடலின் அடிகள், அடுத்த இரு அடிகள் மேல் வைப்பு அடிகள். இன்று கீர்த்தனைப் பாடல்களில் எடுப்பு (பல்லவி) மீண்டும் மீண்டும் வருவதுபோல் இப்பாடல்கள் பாடப்படுகின்றன.

**நாலடி மேல் வைப்பு**

நான்கடிகளுக்கு மேல் வைப்பாக அமையும் முறையில் வரும் யாப்பிசைப் பதிகங்கள் நாலடி மேல் வைப்பு பதிகங்கள் அழைக்கப்படுகின்றன. மேல் வைப்பாக அமையும் இரண்டடிகளும் சந்தமும் பொருளும் ஒன்றாக அமைய மேல் கூடுதலாக அமையும்.

ISSN: 2582-9513

கூடுதலாக உள்ளமையால் மேல் வைப்பு என்று பெயர் பெறுகிறது. சம்பந்தர் மூன்றாம் திருமுறையில் மூன்று பதிகங்களை இம்முறையில் பாடியுள்ளார்.

இவ்வகையில் திருஞானசம்பந்தர் பாடிய திருவாவடுதுறை, புகழியல் பாடிய காந்தாரப் பஞ்சமம் பண் பதிகங்கள் இரண்டும், மதுரை மீது பாடப்பட்ட பழம்பஞ்சுரப் பண் பதிகம் ஒன்றும் கிடைத்துள்ளன.

**இடரினும் தளரினும் எனதுறு நோய்**
**தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதியனே**
**இதுவோ எமமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்**
**அதுவோ வுனதின் னருள்ஆ வடுதுறை அரனே (சம்பந்தர் III:4:1)**

இவ்வகையில் திருநாவுக்கரசரின் திருவையாற்று கயிலைக் காட்சியைக் காட்டும் பாடலையும் காணலாம்.

**மாதர் பிறை கண்ணி யானை**
**மாலையான் மகளொடும் பாடி**
**போதொடு நீர் சுமந் தேத்திப்**
**புதுவா ரவர்பின் புகுவேன்**
**யாதுஞ் சுவடுபடாமல்**
**ஐயா றடைகின்ற போது**
**காதன் மடப்பிடி யோடுங்**
**களிறு வருவன கண்டேன்**
**கண்டேன் அவர் திருபாதங்**
**கண்டறியாதன கண்டேன் (நாவுக்கரசர் IV திருமுறை)**

**திருமுக்கால்**

நான்கடி கொண்ட பாடலில் முதலடியும் மூன்றடியும் நான்கு நான்கு சீர்களால் அமைய இரண்டு , நான்காம் அடியும் மூன்று சீர்களால் அமையும் பதிகங்களை திருமுக்கால் என்பர். திருஞானசம்பந்தர் அருளிய சாதாரிப் பண்ணில் அமைந்த ஆறு பதிகங்கள் ( 3:94,95,96,97,99, 100 ) திருமுக்கால் யாப்பு வகைப் பதிகங்களாக அமைந்துள்ளன. இவை வெங்குரு, இன்னம்பர், சிறுகுடி, நெல்வெண்ணெய், வீழிம்மிழலை, முதுகுன்றம் என்ற தலங்கள் மீது அமைந்துள்ளன.இவை இசைப்பாக்களாகும். இப்பதிகப் பாடல்களில் முதலடியில் அவ்வூரின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார். முதலிரண்டு அடிகளில் தல மூர்த்தத்தை வருணிக்கிறார். பின்னிரு அடிகள்

ISSN: 2582-9513

இவ்விறைவனைத் தொழுவார் பெறும் பயன்களைக்குறிப்பிடுகிறார்.

**விண்ணவர் தொழுதெழு வெங்குரு மேவிய**
**சுண்ண வெண்பொடி யணிவீரே**
**சதுண்ண வெண்பொடி யணிவீரும் தொழுகழல்**
**எண்ணவல் லாரிட ரிலரே (சம்பந்தர் 3:94:1)**


**திரு எழுகூற்றிருக்கை**

எழுகூற்றிருக்கை – ஏழு கூறுகளது இருக்கையாகிய பாட்டு. இருக்கை- இருப்பிடம். ஏழு கூறுகள் கொண்டது. ஒன்று முதல் ஏழு முடிய உள்ள எண்கள் ஒரு முறை கூடியும், குறைந்தும் வர, எண்ணலங்காரம் அமையப் பாடுவதால் அமையும். இப்பாட்டு அகவற் பாவாக வரும். இது மறைக்கவி எனப்படும் சித்திர கவிகளில் ஒன்றாகும். இதனைத் தேர் பிரபந்தம் என்று கூறுவர். தேர் அமைப்பு அடிப்படையில் அமைந்த சித்திரகவியாகும். சம்பந்தர் அருளிய பதிகம் இம்முறையில் அமைந்துள்ளது. பிற்காலத்தில் தோன்றிய தேர் பிரபந்த வகையின் மூல இலக்கியமாக இது அமைந்துள்ளது.

**ஓருரு வாயினை மானாங் காரத்**
**தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்**
**ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்**
**படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகளாயினை**
**இருவரே டொருவ னாகி நின்றனை (சம்பந்தர் 1:128:1)**

இப்பாடல் வியாழக்குறிஞ்சி பண்ணில் அமைந்துள்ளது. நக்கீர தேவநாயனாரும், அருணகிரியாரும் இவ்வமைப்பில் பாடல்கள் பாடியுள்ளனர்.

ISSN: 2582-9513



திருஎழுகூற்றிருக்கை - இரதபந்தம்

**பொருள் அடிப்படை**

பொருள் அடிப்படையில் திருஞானசம்பந்தர் அருளிய விருந்தாய இசைத்தமிழ் மாலைகளாக நமச்சிவாய திருப்பதிகம், கோளறு திருப்பதிகம், திருப்பதிகக் கோவை, க்ஷேத்திரக்கோவை,

ISSN: 2582-9513

திருநீற்றுப்பதிகம், திருஇயமகம், திருப்பாசுரம் ஆகியவை அமைந்துள்ளன.

**நமச்சிவாய திருப்பதிகம்**

நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதும் பதிகம் நமச்சிவாய திருப்பதிகம்

**காத லாகிக் கசிந்து கண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேத நான்கினு மெய்பொரு ளாவது**
**நாத நாமம் நமச்சி வாயவே (சம்பந்தர் 3:49:1)**

இப்பதிகம் கௌசிகப்பண்ணில் அமைந்துள்ளது.மேலும் பஞ்சாக்கரத்திருப்பதிகம் ஒன்றும் உள்ளது.

**திருநீற்றுப்பதிகம்**

திருநீற்றின் சிறப்பை எடுத்துக் கூறும் பதிகம் திருநீற்றுப் பதிகம் . பாண்டியனின் வெப்பு நோய் நீக்க பாடிய பதிகமாகும்.

**மந்திர மாவதுநீறு வானவர் மேலதுநீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சம்பந்த் லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை, பங்கன் திருவால வாயன் திருநீறே**
**(சம்பந்தர் 2:66:1)**

இத்திரு நீற்று பதிகத்தில் ஐம்பத்து ஐந்து முறை திருநீற்றின் பெருமைகளைச் சம்பந்தர் எடுத்துக் கூறியுள்ளார். திரு நீறு மந்திரம் போல நினைத்ததைக் கொடுக்கும் ஆற்றல் மிக்கது என்பதை இப்பதிகம் உணர்த்துகிறது.

**கோளறு பதிகம்**

சிவபெருமானை வழிபடுபவர்களுக்கு ஒன்பது கோள்களும் நல்லனவாக அமையும் என்ற நிலையில் கோளறு பதிகம் அமைந்துள்ளது.

**வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வினை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல ணிந்தெ னுளமே புகுந்தவதனால்**
**ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன், வெள்ளி சனி பாம்பிரண்டுமுடனே**
**ஆசறுநல்ல நல்ல அவை நல்ல நல்ல வடியா ரவர்க்கு மிகவே (சம்பந்தர் 2:85:1)**

சூரியன் முதலான ஒன்ப கோள்களும் அடியார்களுக்கு நல்லன நல்லன என்கிறார். இப்பதிகத்தின் திருக்கடைக்காப்புப் பாடலில் " தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து வண்ணம் உரை செய் ஆன சொல் மாலை யோதும் அடியார்கள் வானில் அரசாள்வார் ஆணை நமதே" என்று ஆணையிட்டுரைத்துள்ளார். சம்பந்தர் ஆணையிட்டு உரைத்த ஐந்து பதிகங்களுள் இதுவும் ஒன்றாகும்.

**திருப்பாசுரப்பதிகம்**

திருஞானசம்பந்தர்மதுரையில் சமணர்களொடு நிகழ்த்திய வெப்பு நோய் நீக்கல், அனல் வாதம், புனல்வாதங்களின் பொழுது எழுதிய திருப்பதிகம் திருப்பாசுரம் (3:54) என்று அழைக்கப்படுகிறது.

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமம்**
**சூழ்க வையகமும் துயர் தீர்கவே (சம்பந்தர் 3:54:1)**

இப்பதிகம் வைகையை எதிர்த்து ஏடு சென்ற பொழுது , பாண்டியனையும் விழிப்படைய வைத்தது. தென்னகத்தில் சமணம் வீழ்ந்து சைவம் செழித்தது.

**திருப்பதிகக்கோவை**

திருஞான சம்பந்தர் வழிபட்ட தலங்களைத் தொகுத்துணர்த்தும் திருப்பதிகக் கோவை என்ற சேத்திரக் கோவைப் பதிகமும், பொருளடிப்படையில் யாப்பில் அமைந்த பதிகங்களாகும்.

**திருஇயமகம்**

திருஇயமகம் என்ற யாப்பில் அமைந்த பதிகமும் இவ்வகையில் அமையும். யமகம் என்பது வடசொல். ஓர் அடியில் வந்த சொல்லோ தொடரோ வேறு பொருள்பட மீண்டும் மடக்கி வருவதனை யமகம் என்பர். இதனை மடக்கு என்றும்கூறுவர்.

திருக்கழுமலம், திருஏகம்பம், திருஆலவாய், திருவீழிமிழலை தலத்தின் மீது பாடிய பழம் பஞ்சுரப்பதிகங்கள் திருஇயமக வகையைச் சார்ந்தது.

உற்**றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே**
**கற்றவர் காய்வது காமனையே கனல் விழி காய்வது காமனையே**
**அற்ற மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது முன்பணியே**
**பெற்று முகந்தது கந்தனையே பிரமபுரத்தை யுகந்தனையே (சம்பந்தர் 3:113:1)**

ஈசனே உமாதேவியார் உம்மைப் பிரியாது பொருந்தி இருப்பது உமது திருமேனியை, மெய்ஞ்ஞானிகள் உணர்ந்து போற்றுவது உமது மெய்த்தன்மை உடைய பேரருளையே, கற்றுணர்ந்த ஞானிகள் வெறுப்பது பந்தம் உடைய சுற்றத்துடன் கூடிய குடும்ப வாழ்க்கையே நீவிர் நெற்றிக் கண்ணால் சினந்து மன்மதனையே என்ற பொருளில்

**மெய் என்பது 1. திருமேனி 2. மெய்யருளையும்**
**பணி என்பது 1.பாம்பு 2.பணிவிடைசெய்தல்**

**காமன் என்பது 1.குடும்பம்  2. மன்மதன்**

இப்பாடலில் இருபொருள்கள் அமைந்துள்ளமை போல் ஏனைய பதிகப் பாடல்களிலும் அமைந்துள்ளன.

ஏனைய திருப்பல்லாண்டு , திருஅங்கமாலை, தசபுராணம், பாவநாசத்திருப்பதிகங்களை பொருள் அடிப்படையில் பாகுபடுத்தலாம்.

**அமைப்பு அடிப்படை**

அமைப்பு அடிப்படையில் விருந்தாய இசைத்தமிழ் மாலைகளாக வினாவுரை, மாலைமாற்று, சக்கரமாற்று, மொழிமாற்று, கூடல்சதுக்கம், கோமுத்திரி இவற்றுடன் தேர்பிரபந்தமான திருஎழுக்கூற்றிருக்கையையும் சேர்க்கலாம்.

**வினாவுரைப்பதிகங்கள்**

வினாவுரைப் பதிகங்களாக திருஞானசம்பந்தர் பாடிய பத்து பதிகங்கள் உள்ளன. வினா கேட்டு அதற்கு பதில் கூறும் நிலையில் வினாவுரைப் பதிகங்கள் அமைந்து காழியில் இருக்கும் இறைவனே நீ வீழியை விரும்பியது ஏனோ என்று வினவும் நிலையில் பாடல்கள் அமையும்.அடியார்களின் பார்வையில் ஒரு வினாவை எழுப்பி அவர்களின் வினாவிற்கு விடை கூறும் முறையில் இப்பதிகப் பாடல்கள் அமைந்துள்ளன.

**மைம்மரு பூங்குழல் கற்றைதுற்ற**
**வாணுதல் மான்விழி மங்கையோடும்**
**பொய்ம்மொழி யாமறை யோர்களேத்திப்**
**புகலி நிலாவிய புண்ணியனே**
**எம்மிறை யேயினும் யாதமுக்க**
**ணீசவெ, னேசவி தென்கொல் சொல்லாய்**
**மெய்ம்மொழி நான்மறையோர் மிழலை**
**விண்ணிழி கோயில் விரும்பியதே (சம்பந்தர் 1:4:1)**

இப்பாடல் நட்டபாடைப்பண்ணில் அமைந்துள்ளது.

**மாலைமாற்று**

திருஞான சம்பந்தர் தந்துள்ள புத்திலக்கிய வகைகளுள் மாலைமாற்றுப்பதிகமும் ஒன்றாகும். இது இசைப்பா பதிகமாகும். கௌசிகப்பண்ணில் அமைந்துள்ளது. சீகாழித் தலத்தின் மீது (3: 117) அமைந்துள்ளது. மாலைமாற்று என்பது விருந்தாய இசைத்தமிழ் மாலைகளுள் முதலடியின் முதல் எழுத்தில் இருந்து இறுதி அடியின் இறுதி வரை படித்தால் பொருள்நிலை, இறுதியிலேந்து முதலில் படித்தாலும் பொருள் நிலை மாறாததாகும். இவ்வகையில் ஒத்த எழுத்துக்களின் நிரலில் இப்பதிகம் அமைந்துள்ளது.

**யாமாமாநீ யாமாமா யாழீகாமர் காணாகா**

ISSN: 2582-9513

**காணாகாமா காழீயா மாயாயாநீ மாமாயா**
**நேரகழாமித யாசழிதா யேனனி யேனனி ளயுசிகா**
**காழியுளானின யேனினையே தாழிசயாதமி ழாகரனே**
**(சம்பந்தர் 3:117:1)**

**சக்கரமாற்று**

ஒரு சக்கரம் சுழன்று சுழன்று வருவது போல பாடல்களின் சில பெயர்கள் சுழன்று சுழன்று வரும். இது ஒருவகை சித்திர கவியாகும். சீர்காழிக்குரிய பன்னிரு பெயர்கள் பன்னிரு பாடல்களில் சுழன்று வரும் நிலையில் இப்பதிகங்கள் அமைந்துள்ளன. சீகாழியில் இருந்த பொழுது பாடியது. காந்தாரப்பண்ணில் அமைந்த திருக்கழுமலப்பதிகமாகும்.

**பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குறுப் பெருநீர்த் தோணி**
**புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவம் சண்பை**
**அரமன்னு தண்காழி கொச்சைவய முள்ளிட்டங் காதியாய்**
**பரமனூர் பன்னிரண்டாய் நின்ற திருக் கழுமலம் பரவு மூரே**
**(சம்பந்தர் 2: 70:1)**

**கோமுத்திரி**

திருஞானசம்பந்தர் தந்த சித்திர கவிகளுள் கோமுத்திரியும் ஒன்றாகும். இதனை வழிமுடக்கும் ஆவின் பாய்ச்சல் என்று சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். ஆவினுடைய பாய்ச்சல் வழிமுடக்கி அமைவது போல அமைந்துள்ளது. இதனைப் பிற்காலத்தார் கோமுத்திரி என்று அழைக்கின்றனர். இதுவும் காந்தாரப்பண்ணில் திருப்பிரமபுரத்தலத்தின் மீது பாடப்பெற்றுள்ளது. இதனை ஆவின்பாய்சல் என்றும், கோமுத்திரி அந்தாதி என்றும் கூறுவர். சீகாழிக்குரிய பனிரெண்டு பெயர்களைக் கூறும் காந்தாரப் பண் பதிகம் இவ்வகையில் அமைந்துள்ளது.

**பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர் குறைவிலாப் புகலிபூனே**
**மாமகளூர் வெங்குருநற் றோணிபுரம் பூந்தராய் வாய்ந்த**
**விஞ்சிகச்(சம்பந்தர் 2:74:1)**

**கூடற் சதுக்கம்**

இருபத்தொரு தலங்களை பதிகப் பாடல்கள் தோறும் கூறும் யாப்பை கூடல் சதுக்கம் என்பர். திருஞானசம்பந்தர் பழம்பஞ்சமப் பண்ணில் பாடிய ஒரு பதிகம் அமைந்துள்ளது. திருமயேந்திரம், திருக்கயிலாயம், திருவாரூர், திருஆனைக்கா என்ற பதிகங்களைப் பழம் பஞ்சுரப் பண்ணில் அமைந்துள்ளது. பாடல் தோறும் ஒவ்வொரு பாடலிலும் அடிமுடிதேடிய வரலாறு குறிப்பிடப்படுகிறது.

**மண்ணது வுண்டரி மலரோன் காணா**
**வெண்ணா வல விரும்பு மயேந்திரரும்**
**சுண்ணது வோங்கிய கயிலையாரும்**
**அண்ணலா ரூலாதி யானைக்காவே (சம்பந்தர் 3:109:1 )**

**இசை அடிப்படை**

இசை அடிப்படையில் அமைந்த விருந்தாய இசைத்தமிழ் மாலைகளாக திருஞான சம்பந்தர் பாடிய திருத்தாளசதியும் யாழ்மூரி, திருவிராகப் பதிகங்களும் அமைந்துள்ளன.

**திருவிராகம்**

திருஞானசம்பந்தர் அருளிய விருந்தாய இசைத்தமிழ் மாலைகளில் திருவிராகமும் ஒன்று. இவை முடுகு வண்ணத்தில் அமைந்துள்ளன. தாள இலக்கியங்களாக அமைந்துள்ளது.

கலிப்பாட்டின் அராகம், தெய்வத்தமிழ் பேசும் திருவிராகமாக அமைந்து பிற்காலத்தில் சந்தப் பாக்களின் முன்னோடிப் பாக்களாக அமைந்துள்ளன. இவ்வகையில் சம்பந்தர் பாடிய நாற்பத்து நான்கு பதிகங்கள் உள்ளன.

இவற்றில் பெரும்பகுதி சாதாரி பண்ணில் அமைந்துள்ளது.

**சுரருலலகு நரர்கள்பயி றரணிதல முரயழிய வரணமதின்முப்**
**புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய பரமணிடமக்**
**வரமருல வரன்முறையி நிரை நிறைகொள் வரு சுருதி சிரவுரையினால்**
**பிரமனுய ரரனெழில்கொள் சரணவினை பரவவளர் பிரமபுரமே (சம்பந்தர்3:67:1)**

**யாழ்மூரி**

திருஞானசம்பந்தர் பாடிய விருந்தாய இசைத்தமிழ் மாலைகளில் முதல் திருமுறையின் இறுதிப்பதிகம் யாழ்மூரிப் பதிகமாகும். இது மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ளது. திருத்தருமபுரத் தலப் பதிகமாகும். திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாற்றொடு தொடர்புடையது. இதனை யாழ்மூரிப் பண் என்ற சிலர் அழைக்கின்றனர். இது பண்ணல்ல பதிகமே. தாளப் பின்னல் பதிகமாக இப்பண் பதிகம் அமைந்துள்ளது.

**மாதர் மடப்பிடியும் மடவண்ணமு மன்னதோர்**
**நடை யுடைம் மலைமக டுணையென மகிழ்வர்(சம்பந்தர்1:136:1)**

இது தாள இயக்கங்களின் முதல் நடை, வாரநடை, கூடை நடை, திரள் நடை என்ற முறையில் அமைந்துள்ளது. இது திருஞானசம்பந்தர் தந்த புதுவகையாகும். இதனை ஆக்கரிய யாழ்மூரி என்பர்.

**திருத்தாளச்சதி**

உலக இசை வரலாற்றில் மூன்று வயதில் பெரும் இலக்கிய பதிகங்களைத் தந்தவர் திருஞானசம்பந்தர் ஆவார். தனி இசைச் சிறப்புகளைப் இப்பதிகங்கள் இசைக்குரிய நுட்பமான காலக் கணக்குடன்

ISSN: 2582-9513

அமைந்துள்ளன.

சம்பந்தர் தந்த அரிய இசை வகைகளுள் திருத்தாளச் சதியும் ஒன்றாகும். வியாழக் குறிஞ்சிப் பண்ணில் திருக்கழுமலத்தின் மீது இப்பாடல் பாடப்பெற்றுள்ளது. பிற்காலத்தில் தோன்றி திருப்புகழ்ப்பாடல்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன.

**பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்**
**பாலே சேர்வர் மேயோர்கள் பயில்கண முனிவர்களும்**
**சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின் மங்கை தன்னொடும்**
**சேர்வார் நாண ணீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாம்**
**(சம்பந்தர்1:26:1)**

பந்தம், கந்தம் என்பன தாளம் பற்றிய கலைச் சொல்லாகும். கந்தம் என்பது ஒரு தாளத்தால் கட்டிய பாடலாகும். பந்தம் என்பது பல தாளங்களால் கட்டப்பெற்ற பாடலாகும். இப்பதிகத் திருக்கடைக்காப்பில் ஏழே ஏழே நாலே மூன்று இயலிசை இசையியல்பாய் என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். இப்பதிகம் இதனால் தாளமாலிகைப் பதிகமாக அமைந்துள்ளது.

இவ்வகையில் திருஞானசம்பந்தர் அருளிய விருந்தாய இசைத்தமிழ் பாமாலைகள் பிற்காலத்தில் தோன்றிய இவ்வகை இலக்கிய வகைகளுக்கு மூல இலக்கியங்களாக நின்று வழிகாட்டுகின்றன. பண்ணமைதியாலும், தாள அமைதியாலும், கட்டளைப் பாங்கொடு அமைந்த இப்பாடல்கள் பிற்கால இசை இலக்கிய வளர்ச்சிக்கும், சித்திரகவி வளர்ச்சிக்கும் துணை நிற்கின்றன. இவற்றால் இசைவளம் மேம்பட்டு வருவதொடு தெய்வ வழிபாட்டு பாடல்களும் சிறப்புற்று வருகின்றன. தெய்வத் தமிழிசை உலகிற்கு திருஞானசம்பந்தர் அருளி உள்ள இவற்றைப் பாடி பணிந்து வழிபடுவோம். நலம் பெறுவோம்.

**துணைநின்ற நூற்கள்**


1. திருஞானசம்பந்தர் தேவாரம், முதல் திருமுறை, ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை , மூன்றாம் பதிப்பு ,2011
2. திருஞானசம்பந்தர் தேவாரம், இரண்டாம் திருமுறை, ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை , மூன்றாம் பதிப்பு ,2011
3. திருஞானசம்பந்தர் தேவாரம், மூன்றாம் திருமுறை, ஞானசம்பந்தம் பதிப்பகம், மயிலாடுதுறை , மூன்றாம் பதிப்பு ,2011
4. வித்துவான் க.வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறைகள் (இரண்டு பாகங்கள்), ராமையா பதிப்பகம், சென்னை 2011
5. ஜீ.ச. முரளி, பன்னிரு திருமுறை, சதுரா பதிப்பகம் சென்னை.2006

ISSN: 2582-9513

6. முனைவர் இரா. செல்வகணபதி (பதிப். ) சைவ சமயக் கலைக் களஞ்சியம், தொகுதி -4 , திருமுறைத்தலங்கள், தெய்வச் சேக்கிழார் மனித வள மேம்பாட்டு அறக்கட்டளை, சென்னை 2013.
7. க.வெள்ளைவாரணனார், இசைத்தமிழ் ,ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியா சாலை ,சிதம்பரம்.